OS: 656/2018

Date: 21.03.2024

பெயர் :சண்முகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>- 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்

நான் இவ்வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து ஆதியில் ஒரு குழந்தை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை கந்தசாமியும், 1 ம் பிரதிவாதி வீரமுத்துவும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எனது தந்தை காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி வீரமுத்து வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 20.01.2015 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் வாரிசுகன் தான் 8 முதல் 12 பிரதிவாதிகள் ஆவார்கள். 1 ம் பிரதிவாதியான வீரமுத்துவின் பாகமானது அவரது வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு 4 ல் 1 பாகம் அளிப்பதில் எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. 2 பிரதிவாதி கோவிந்தனும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 5 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி கோவிந்தனுக்கு 4 ல் 2 பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்யும்போது சொல்லியுள்ள பாக விகிதாசாரங்கள் தவறு என மீண்டும் தாவாவை திருத்தம் செய்து மனுவின்பேரில் அனுமதிக்கப்பட்டு திருத்தியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அந்த தவறு தட்டச்சு தவறாக ஏற்பட்டிருக்கும். அதன்படி தாவா சொத்துக்களில் 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு ¼ பாகம் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களை 1 ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்போதோ அல்லது அவரது வாரிசுகளோ சொத்தில் வில்லங்கம் செய்தார்களா என்றால் அவர்கள் முயற்சி செய்ததால் தான் நான் வழக்கு போட்டேன். மேற்படி 1 ம் பிரதிவாதி மற்றும் 8 முதல் 12 பிரதிவாதிகளும் எவ்வித வில்லங்கங்களும் ஏற்படுத்த முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 1 ம் பிரதிவாதியும், 8 முதல் 12 பிரதிவாதிகளும் எவ்வித வில்லங்கமும் சொத்தினை பொருத்து செய்யவில்லை என்பதால் நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொருத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள B பரிகாரம் தள்ளுபடியாக

வேண்டும் என்றால் சரியல்ல.  8 முதல்  12 பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை பொருத்து பாகம் அளிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை.

**மறுவிசாரணை**:- இல்லை.

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.